பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**22 05 2026** **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சைப்ரஸ் அதிபர் திரு **Nikos Christodoulides**-வுடன் நடத்தி பேச்சுக்கள் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. ஊடுருவல்காரர்கள் அனைவரும் வெளியேற்றப்படுவார்கள் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

3. ஏற்றுமதியாளர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

4. மூத்த குடிமக்களின் நலனுக்கென ஜீவன் என்ற கைபேசி செயலியை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

5. ஆசிய **Teakwondo** சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Etisha Das** வெண்கலப்பதக்கம் வென்றார்.

. . இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>>

சைப்ரஸ் அதிபர் திரு **Nikos Christodoulides**-வுடன் நடத்திய பேச்சுக்கள் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த பேச்சுக்கள் இருநாடுகளுக்கும் பயனளிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

உலக வளத்திற்கும் இது உறுதுணையாக இருக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

இருநாடுகளுக்கு இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து இந்த பேச்சுக்களின்போது விரிவாக விவாதிக்கப்பட்டதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

ஊடுருவல்காரர்கள் அனைவரும் வெளியேற்றப்படுவார்கள் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இதுதொடர்பாக திரிபுரா, அஸ்ஸாம், மேற்குவங்க முதலமைச்சர்களுடன் தாம் ஆலோசனை மேற்கொள்ள உள்ளதாக தெரிவித்தார்.

ஊடுருவல்காரர்களை தடுப்பதில் எல்லை பாதுகாப்புப் படை முக்கிய பங்கு வகித்து வருவதாகவும் திரு அமித் ஷா கூறினார்.

<<<<<<>>>>>>

கல்வித்துறையின் வளர்ச்சியில் தேசிய கல்விக்கொள்கை முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், திறன் அடிப்படையிலான சமமான கல்வி முறையை வலுப்படுத்துவதற்கான அம்சங்கள் இந்த கல்விக் கொள்கையில் இடம்பெற்றிருப்பதாக கூறினார்.

மாணவர்களின் எதிர்கால தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும், கல்வியின் தரம், சர்வதேச தரத்திற்கு இணையாக வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையிலும் தேசிய கல்விக்கொள்கை செயல்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்ட வேண்டும் என்ற நோக்கில், கல்வித்துறை செயல்பட்டு வருவதாகவும் திரு தர்மேந்திர பிரதான் கூறினார்.

<<<<<<>>>>>>

தொழில்நுட்ப பயன்பாட்டில் இந்தியா சிறந்து விளங்குவதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாடு முழுவதும் தரவு மையங்கள் துறை விரிவடைந்து வருவதாக தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களை கையாளும் வகையில் இந்த மையங்கள் வளர்ச்சி கண்டு வருவதாக அவர் கூறினார்.

தரவு பொருளாதாரம் முதலீடுகளை அதிகரிக்க உதவிடும் என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பல்லுயிர் பாதுகாப்பில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

பல்லுயிர் பெருக்க தினத்தையொட்டி இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

பல்லுயிர் பாதுகாப்பில் உள்ளூர்வாசிகள் முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் கூறினார்.

தேசிய பல்லுயிர் ஆணையம் மற்றும் மாநில பல்லுயிர் வாரியங்கள் செயல்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

பல்லுயிர் பெருக்கத் திட்டங்களுக்கு தேவையான நிதி வழங்கப்பட்டு வருவதாகவும் திரு புபேந்தர் யாதவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

ஏற்றுமதியாளர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவாலுடன் இணைந்து ஏற்றுமதியாளர்களுடன் நடத்திய கலந்துரையாடலின்போது அவர் இவ்வாறு கூறினார்.

தொழில் புரிவதற்கு உகந்த சூழ்நிலையை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கிடையே, நாட்டின் ஏற்றுமதி கடந்த மாதம் 13 புள்ளி ஐந்து ஒன்பது சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளதாக வர்த்தகத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>>

மூத்த குடிமக்களின் நலனுக்கென கைபேசி செயலி ஒன்றை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில், சமூக நீதித்துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் பங்கேற்று இதனை அறிமுகப்படுத்தினார்.

ஜீவன் என்ற இந்த கைபேசி செயலி, மூத்த குடிமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கான அனைத்து அம்சங்களையும் கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

நாட்டில் இதுவரை இல்லாத அளவிற்கு நேற்று **270 Gigawatt** மின் தேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதால், மின் தேவையும் அதிகரித்துள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பொதுமக்கள் மின்சாரத்தை முறையாக பயன்படுத்துமாறும் அந்த செய்திக்குறிப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

மேற்குவங்க முதலமைச்சர் திரு சுவேந்து அதிகாரி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வை சந்தித்து பேசினார்.

முதலமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் மரியாதை நிமித்தமாக குடியரசுத் தலைவரை அவர் சந்தித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனைத்தொடர்ந்து, குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணனையும் அவர் சந்தித்து பேசினார்.

பின்னர் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங்கையும், மேற்குவங்க முதலமைச்சர் சந்தித்து பேசினார்.

மாநிலத்தின் வளர்ச்சிக்கான திட்டங்கள் குறித்து தம்மோடு அவர் விவாதித்ததாக திரு ராஜ்நாத் சிங் சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

திரு சுவேந்து அதிகாரி தலைமையில் மேற்குவங்கம் வளர்ச்சிப் பாதையில் புதிய உயரத்தை எட்டும் என்றும் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

பீகார் மாநிலத்தில் விளையாட்டுத்துறை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு சாம்ராட் சௌத்ரி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளை பட்டியலிட்டுள்ளார்.

Rajgir-ல் 40 ஆயிரம் இருக்கை வசதிகளுடன் கூடிய சர்வதேச தரத்திலான கிரிக்கெட் மைதானம் கட்டப்பட்டு வருவதாகவும் திரு சாம்ராட் சௌத்ரி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

ஒடிஷாவில் நேரிட்ட சாலை விபத்தில் இரண்டு குழந்தைகள் உட்பட 6 பேர் உயிரிழந்தனர். 4 பேர் காயமடைந்தனர்.

Ganjam மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதியில் பேருந்து ஒன்று ஆட்டோ ரிக்ஷா மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<<>>>>>>

ஆந்திராவில் தொழில் முதலீடுகள் அதிகரித்து வருவதாக அம்மாநில தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு லோகேஷ் கூறியுள்ளார்.

கடப்பா மாவட்டத்தில் 600 மெகாவாட் சூரிய மின் உற்பத்தி பிரிவினை திறந்துவைத்து அவர் பேசினார்.

தொழில் முதலீடுகள் அதிகரித்துள்ளதன் காரணமாக கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் திரு லோகேஷ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மகாராஷ்ட்ராவில் வீடு வீடாக சென்று வாக்காளர்களின் விவரங்களை சரிபார்க்கும் பணி மேற்கொள்ளப்பட உள்ளதாக அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு சொக்கலிங்கம் கூறியுள்ளார்.

மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இப்பணிகள் அடுத்த மாதம் 30-ஆம் தேதி தொடங்க உள்ளதாக தெரிவித்தார்.

ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் இப்பணிகளை மேற்கொள்ள உள்ளதாகவும் அவர் கூறினார்.

இப்பணிகள் அனைத்தும் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்படும் என்றும் திரு சொக்கலிங்கம் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

ஆப்கானிஸ்தானில் பெய்த கனமழை காரணமாக ஆறு பேர் உயிரிழந்தனர். 11 பேர் காயமடைந்தனர்.

கந்தஹார், **Herat, Ghor** மற்றம் **Takhar** மாகாணங்களுக்கு உட்பட்ட பகுதியில் பலத்த காற்றுடன் பெய்த மழை காரணமாக **20** வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் இதுவரை மழை பாதிப்பு தொடர்பான சம்பவங்கள் காரணமாக **250** பேர் உயிரிழந்துள்ளதாகவும், **344** பேர் காயமடைந்துள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

ஆசிய **Teakwondo** சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Etisha Das** வெண்கலப்பதக்கம் வென்றார்.

**Ulaanbaataar**-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் **73** கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

------------------------

உலக பாரா டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா மூன்று வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

சீன தைபே-யில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Bhavina Patel** — கொரியாவின் **Sunghye Moon** இணையும், கலப்பு இரட்டையர் பிரிவில் **Bhavina Patel** — **Shubham Wadhwa** இணையும், மற்றொரு கலப்பு இரட்டையர் பிரிவில் **Vijaya Deepika Gangapatnam** — இந்தோனேஷியாவின் **Adyos Astan** இணையும் வெள்ளிப்பதக்கம் வென்றன.

இப்போட்டியில் இந்தியா இதுவரை **2** தங்கம், **3** வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

------------------

தாஷ்கண்டில் நடைபெற்றுவரும் உலக சேலஞ்ச் கோப்பை ஜிம்னாஸ்டிக் போட்டியில் இந்தியாவின் **Pranati Nayak** மற்றும் **Protistha Samanta** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

-----------------

லாவோஸ் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manush Shah** — **Diya Chitale** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை **11-8, 7-11, 11-9, 11-8** என்ற செட் கணக்கில் ஜப்பானின் **Kazuhiro Yoshimura — Reina Aso** இணையை வென்றது.

-----------------

ஃபெடரேஷன் கோப்பைக்கான தடகள சாம்பியன் போட்டி இன்று ராஞ்சியில் தொடங்கியது.

------------

**18** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் ஹாக்கிப்போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**Sweety Kujur** தலைமையிலான இந்த அணியில், **Shruti Kumari, Diya** உட்பட **17** பேர் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி ஜப்பானில் வரும் **29-**ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் **6-**ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

---------------

உலக மல்யுத்த சாம்பியன் போட்டி ஒத்திவைக்கப்படுவதாக அதற்கான சர்வதேச சம்மேளனம் அறிவித்துள்ளது.

பக்ரைனில் அக்டோபர் மாதம் **24-**ஆம் தேதி தொடங்க இருந்த இப்போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தற்போது அங்கு நிலவும் சூழலை கருத்தில்கொண்டு இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<END>>>>>>**